POWER GRID
278
Inward.
08.02.22
Date:
DHARMAPURI




**பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்**

**தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன் கீழ் கீழ்க்கண்ட தகவல்கள் அளிக்க வேண்டுகிறேன்**

அனுப்புதல்

B. சீனிவாசன் (செல்: 99436 37961)
த/பெ. பாலகிருஷ்ணன்,
கணபதி ஸ்டோர், கணபதி பாளையம்,
இரும்பாலை கேட் எண் –1,
சேலம் வட்டம், சேலம் மாவட்டம் –636 030

பெறுதல்

**பொது தகவல் அலுவலர் அவர்கள்,**
பவர் கிரிட் கார்ப்பரேசன் ஆப் இந்தியா,
சோமனஹள்ளி அஞ்சல்,
பென்னாகரம் வட்டம்,
தருமபுரி மாவட்டம்

ஐயா,

வணக்கம் நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். என் தாய்வழி தாத்தாவாகிய லேட்.பெருமாள்ரெட்டி த/பெ.சென்றாய ரெட்டியார், கலப்பம்பாடி கிராமம், ஒண்டிக்கோட்டை, பட்டா எண்.425, புல எண்.399/3 ஹெக்டேர் 1.43க்கு தீர்வை ரூ.3.09 விவசாய நிலம் உள்ளது. மேற்படி விவசாய நிலத்தின் குறுக்கே 400KV உயர்மின் கோபுரம் அமைத்துள்ளீர்கள். இதற்கான இழப்பீடு தொகை வழங்குவது குறித்த சில தகவல்கள் மேற்கண்ட நிலத்தின் சட்டப்பூர்வமான வாரிசு என்ற முறையில் தகவல்கள் பெற விரும்புகிறேன்.

1.மேற்கண்ட உயர்மின் கோபுரம் மேற்கண்ட பட்டா நிலமான கலப்பம்பாடி கிராம ஒண்டிக்கோட்டை பட்டா எண்.425 புல எண்.399/3–ல் அமைக்க மேற்கண்ட நிலத்தின் உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதா, உரிமையாளர் அறிவிப்பை பெற்றுள்ளாரா, அதன் தேதி முதலான முழுவிபரமும் வழங்க வேண்டுகிறேன்.

2. மேற்கண்ட நில உரிமையாளர் மேற்கண்ட அறிவிப்பை பெற்றிருப்பின் யாரால் எந்த தேதியில் பெறப்பட்டது என்ற விபரம் அறிய விரும்புகிறேன்.

3. மேற்கண்ட உயர்மின் கோபுரம் மேற்கண்ட பட்டா நிலத்தில் அமைக்கப் பட்டதற்கு இழப்பீடு தொகை ஏதேனும் இதுவரை வழங்கப்பட்டுள்ளதா என்ற விபரம் பெற விரும்புகிறேன்.

4. மேற்கண்ட கேள்வி எண்.3–ல் கண்ட இழப்பீடு தொகை வழங்கப்பட்டிருப்பின் எந்த தேதியில் யார் யார் பெயருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் வழங்க வேண்டுகிறேன்.

5. மேற்கண்ட இடத்திற்கு இழப்பீடு தொகை வழங்கப்படும் சமயத்தில் நில உரிமையாளர் இறந்திருப்பின் அதற்கான இழப்பீடு எதன் அடிப்படையில் வழங்கப்படும் என்ற விபரமும் வாரிசு அடிப்படையில் வழங்கப்படுமாயின் இதற்கான வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதா என்ற விபரமும் அதன் நகலும் வழங்க வேண்டுகிறேன்.

6. மேற்கண்ட இடத்திற்கு இழப்பீடு தொகை இதுவரை ஏதேனும் வழங்கப் பட்டுள்ளதா ஆம் எனில் அதன் விபரமும் பகுதி தொகை வழங்கப்பட்டிருப்பின் அதன் விபரமும் மீதி தொகை வழங்க வேண்டியிருப்பின் அதன் விபரமும் (இழப்பீடு மொத்த தொகை, இதுவரை வழங்கப்பட்ட தொகை, வழங்க வேண்டிய தொகை) வழங்க வேண்டுகிறேன்.

7. மேற்கண்ட இழப்பீடு தொகை, மீதம் வழங்க வேண்டியிருப்பின் யார் பெயருக்கு எவ்வளவு தொகை வழங்கப்படவுள்ளது என்ற விபரம் அறிய விரும்புகிறேன்.

மேற்கண்ட தகவல்கள் அளிக்கும் ஆவணங்கள் தங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லையெனில் மேற்கண்ட தகவல்கள் எந்த அலுவலரிடம் எந்த முகவரிக்கு அனுப்பி பெற வேண்டுமென்ற விபரத்தை வழங்க வேண்டுகிறேன்.

மேற்கண்ட எனது பெயரில் மேலே கேட்கப்பட்டுள்ள 7 கேள்விகளுக்கும் பதில் வழங்க வேண்டுமாயும் அதற்கான கட்டணமாக ரூ.10/–க்கான நீதிமன்ற கட்டண வில்லை ஒட்டியுள்ளேன் எனவும் தங்களின் மேலான கவனத்திற்கு பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட தகவல்கள் குறித்து தாங்கள் அளிக்கும் பதில் எனக்கு திருப்தி அளிக்கவில்லை எனில், இதுகுறித்து எந்த அலுவலருக்கு மேல்முறையீடு செய்ய வேண்டுமென்ற முகவரியும் வழங்க வேண்டுகிறேன்.

மேற்கண்ட கேள்விகளுக்கு தாங்கள் வழங்கும் பதில்களுக்கு ஏதேனும் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தாலும் அதனை செலுத்த சம்மதிக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

B. [signature]

இப்படிக்கு

பென்னாகரம்
07.02.2022